# கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம் ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

## முன்னிலை : திரு.ஆர்.சங்கரநாராயணன்

ந.க.எண்.473/2012/அ3 நாள்.03.12.2012

அய்யா,

பொருள் :- தொழிற்சாலைகள் வரைபட அனுமதி – கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம் –எருக்குவாய் ஊராட்சி –நில அளவை எண்கள் 1/1A1B,3/1,2,15/1A, 1B,1C –ல் மொத்த பரப்பளவு 35273 ச.மீ–பரப்பளவு கொண்ட இடத்தின் 16232.77ச.மீ –பரப்பில் 2750H.P மின் திறனில் மோட்டார்கள் அமைத்து நிறுவனம் தொழிற்சாலை கட்ட M/s.Shalimar paints Ltd என்ற நிறுவனம் தொழிற்சாலை நிறுவ வரைபட அனுமதி உத்தரவு வழங்குதல்.

பார்வை :-
1.கோட்ட அலுவலர், தீயணைப்பு மீட்பு பணித்துறை, திருவள்ளூர் கோட்டம் திருவள்ளூர் அவர்களின் ந.க.எண்.1162/2011/B நாள்.08.02.2011.
2.துணை இயக்குநர், நலப்பணிகள், திருவள்ளூர் அவர்களின் ந.க.எண்.763/E3/2011, நாள்:22.02.2011.
3.தொழிற்சாலைகள், தலைமை ஆய்வாளர், சென்னை–05 அவர்களின் நி.மு.(டி1) 17753/2011, நாள்:10.06.2011
4.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொறுப்பு) செங்கல்பட்டு அவர்களின் ந.க.எண்.3096/2011/செ.ம.3 நாள்:30.01.2012.
5.தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் சென்னை அவர்களின் உத்தரவு எண்.5642/ நாள்:/13.09.2011.
6.கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம் மன்ற கூட்ட தீர்மான எண்.99 நாள்:28.06.2012
7.இவ்வலுவலக ந.க.எண்.473/2012/அ3 நாள்:28.09.2012.
8. M/s.Shalimar paints Ltd கடித நாள்.06.11.2012.

* * * * * *

உத்தரவு:

கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், எருக்குவாய் ஊராட்சி நில அளவை எண்கள் 1/1A1B,3/1,2,15/1A,1B,1C –ல் மொத்த பரப்பளவு 35273 ச.மீ–பரப்பளவு கொண்ட இடத்தின் 16232.77ச.மீ –பரப்பில் 2750H.P குதிரை வேக மின்திறன் கொண்ட மோட்டார்கள் அமைக்கவும், நிறுவன கட்டிடங்கள் கட்ட M/s.Shalimar paints Ltd என்ற நிறுவனத்திற்கு பார்வை 1 முதல் 5 வரை உள்ள கடிதங்களில் பிறதுறைகளின் தடையில்லாச் சான்று வழங்கப்பட்டதை தொடர்ந்து பார்வை 6–ல் காணும் கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேலும் 7–இல் காணும் இவ்வலுவலக கடிதத்தின் மூலம் கட்டணங்கள் செலுத்த தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து பார்வை 8–ல் காணும் வங்கி வரைவுகள் மூலம் தொகை செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்ட பிரிவு 160 மற்றும் இந்த பிரிவில் வழங்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு M/s.Shalimar paints Ltd என்ற நிறுவனத்திற்கு எருக்குவாய் ஊராட்சி நில அளவை எண்கள் 1/1A1B,3/1,2,15/1A,1B,1C –ல் மொத்த பரப்பளவு 35273 ச.மீ–பரப்பளவு கொண்ட இடத்தின் 16232.77ச.மீ –பரப்பில் 2750H.P குதிரை வேக மின்திறன் கொண்ட மோட்டார்கள் அமைத்து M/s.Shalimar paints Ltd அமைக்கவும், நிறுவன கட்டிடங்கள் கட்டிக்கொள்ளவும் தொழிற்சாலை கட்டிடம் கட்ட இத்துடன் இணைத்துள்ள வரைபடங்களில் உள்ளபடி கீழ்குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்கு உட்பட்டு உத்தரவு வழங்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. கட்டப்படும் கட்டங்கள் வரைபடத்தில் உள்ளவாறு அமைக்கப்படல் வேண்டும்.
2. கட்டப்படும் கட்டடங்கள் 1997 ஆம் வருட கட்டிட விதிகளை நிறைவு செய்யப்படல் வேண்டும்
3. மேற்படி நிறுவனத்திற்கு தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் தேவையான இறுதி ஒப்புதல் பெறப்படல் வேண்டும்.
4. மழை நீர்சேகரிப்பு தொட்டிகள் தேவையான அளவில் கட்டப்பட வேண்டும்.
5. Solar Energy Activator (சோலார் எனர்ஜி ஆக்டிவேட்டர்) பொருத்தப்பட வேண்டும்.
6. போதுமான அளவிற்கு கட்டிடங்கள் Fly Ash Bricks (பிலை ஆஷ் செங்கல்கள்) பயன்படுத்தப்பட வேண்டும்.
7. போதுமான அளவிற்கு நிழல் மரங்கள் வளர்க்கப்பட வேண்டும்.
8. கட்டிடங்கள் கட்டி முடித்தவுடன் தீயணைப்பு – மீட்புப்பணி அலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். என்னென்ன தீத்தடுப்புச்சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும் என்று மறு ஆய்வு செய்து அதன் பின் தீ உரிமம் தீயணைப்பு துறையில் பெற்றுக் கொள்ள வேண்டும்.
9. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் ந.க.எண்.3096/2011/செ.ம.3 நாள்:30.01.2012. உத்தரவில் தெரிவித்துள்ள நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும்.
10. தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர், அண்ணா சாலை, சென்னை–5. அவர்களின் எண்.நி.மு.(டி1) 17753/2011, நாள்:10.06.2011
11. துணை இயக்குநர் நலப்பணிகள் திருவள்ளூர் அவர்களின் ந.க.எண்.763/E32011 நாள்:22.02.2011.
12. இந்த அனுமதி ஆணையின்படி கட்டுமானத்திலோ அல்லது செயல்பாட்டிலோ வேறுபாடு இருக்குமானால் முன்னறிவிப்பின்றி இந்த அனுமதி உத்தரவு இரத்து செய்யப்படும்.
13. ஊராட்சிகள் சட்டம் பிரிவு 160 இன்படி கூடுதல் தொகை வசூல் செய்ய தணிக்யையில் ஏதேனும் தெரிவித்தால், மீதித் தொகையினை செலுத்தவும் தெரிவிக்கப்படுகிறது.
14. வசூல் செய்யப்பட்ட அனுமதி கட்டணத்தில் தணிக்கை துறையின் கீழ் ஏதேனும் மீதம் கட்டணம் செலுத்த தெரிவித்த உடன் செலுத்தவும்.
15. ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதத்தில் கிராம ஊராட்சிக்கு சேரவேண்டிய சொத்துவரி (Property Tax) யை நேரடியாக ஊராட்சிக்கு செலுத்தி வர வேண்டும்.

3/12/12

ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம், கும்மிடிப்பூண்டி.

பெறுநர்

The Managing Director, M/s.Shalimar paints Ltd எருக்குவாய் 3/12/12

நகல்: பொது மேலாளர், மாவட்ட தொழில்மையம், திருவள்ளூர்

நகல்: ஊராட்சி மன்ற தலைவர், எருக்குவாய் ஊராட்சி.

Received GPM

27/12/12

E:/regu/A3/A3/Plan sanction order

G. Rajkumar

Accounts officien